| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>ராஜ்குமார் | அ.வ.எண்.296/2017 | 18.12.2023 |

<u>குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தார் என்றால் நான் விவரம் சொல்லி எனது வழக்கறிஞர் தயார் செய்தார். நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எனது இடத்தில் பிரதிவாதிகள் பிரச்சனை செய்த காரத்தினால் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் வாதி யார் என்றால் எனது மனைவி ஆவார். எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் வெங்கடாசலம் ஆகும். ராமசாமி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ராமசாமியின் தகப்பனார் பெயர் என்ன என்றால் வெங்கடாசலம் (எ) கோவிந்தன் ஆகும். இந்த வழக்கை எனது மனைவி வெண்ணிலா மட்டும் தான் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் தாவா புல எண்ணில் மற்றொரு பகுதியை கிரையம் பெற்ற ராமசாமி மகன் வெங்கடாசலம் சேர்ந்து தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். தாவா சொத்தில் மேற்படி வெங்கடாசலம் அனுபவத்தில் உள்ளரா என்றால் தாவா சொத்தில் இல்லை, அவரது பாகச் சொத்தில் தான் அனுபவம் செய்துவருகிறார். தாவா சொத்தை கிரையம் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், நாச்சாரம்மாள், நல்லேனாள், பொன்னாயி ஆகியோருக்கு பாத்தியப்பட்டது.

2. தாவா சொத்து மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 14 ஏர்ஸ் 34–1/2 சென்ட் ஆகும். மேற்படி நாச்சாரம்மாள், நல்லேனாள், பொன்னாயி ஆகியோர் பெயரில் உள்ள மூல ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்து அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது, பட்டா அவர்கள் பெயரில் உள்ளது. தாவா புல எண்ணில் 22 சென்ட் நான் கிரையம் பெற்றுள்ளேன். தாவா புல எண்ணில் கிரையம் பெற்ற மற்றொரு நபர் எவ்வளவு அளவுகளில் கிரையம் பெற்றார் என்றால் மேற்படி 22 சென்ட் அவர் என்னுடன் சேர்ந்து கிரையம் பெற்றார். நாச்சாரம்மாள், நல்லேனாள், பொன்னாயி ஆகியோருக்கு இடையில் பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கான ஆவணம் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)